உ
சிவமயம்

# அருள்மிகு வேங்கீசுவரர் அழகப்பெருமாள் நாகாத்தம்மன் தேவத்தானம்

**கோடம்பாக்கம், சென்னை-600 026.**



# தல வரலாறு

தேவத்தான வெளியீடு

1975

0-25

ஆடவருக்கு பேண்டுகள், ஷர்ட்டுகள்,

பெண்டிருக்கு சீருடைகள்

இவ்விடம் நேர்த்தியாக குறைந்த

கட்டணத்தில் தைத்துத் தரப்படும்.

# ராம் பிரதர்ஸ்

நெ. 6. சைதாப்பேட்டை ரோடு.

வடபழனி, கோடம்பாக்கம்.

உரிமையாளர் :

T. சுந்தரம்



அருள்மிகு வேங்கீசுவரரை வேண்டிப் புலிக்கால் பெற்ற வியாக்ரபாத முனிவர் பதஞ்சலி முனிவருடன் ஈசுவரனைத் துதித்தல்.

# பதிப்புரை

சென்னை கோடம்பாக்கத்தில், புலியூர் என்னும் பகுதியில் உள்ள அருள்மிகு வேங்கீசுவரர் திருக்கோயில், மிக்க பழமையும் சிறப்பும் வாய்ந்தது. பெரியபுராணம் பாடிய **சேக்கிழார்** பெருமானின் காலத்திற்கு முன்பே, சோழப் பேரரசர்களின் காலத்திலேயே, அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே புலியூரும், வேங்கீசுவரர் திருக்கோயிலும் புகழ் மிக்கு விளங்கியிருந்தன.

இத்தகைய பழமையும் பெருமையும் மிக்க புலியூர் வேங்கீசுவரர் திருக்கோயில், இராச கோபுரம் அமையப் பெருமலும், திருக்கதவுகள் முதலியன இல்லாமலும், விமானங்கள் சிறிது சிதைந்தும் பழுதுற்றுள்ளது. ஆதலின், இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமிழுக்கி விழாவும் நிகழ்த்துதல் வேண்டும், என்னும் பெருவிருப்பம் என் உள்ளத்தில் இடையருமல் தோன்றிக் கிளர்ந்து எழுந்து வளரலாயிற்று.

அருள்மிகு **சாந்தநாயகியம்மை** உடனுறை வேங்கீசுவரப் பெருமானின் திருவருளை முன்னிட்டு, அதற்குரிய முயற்சிகளில் தலைப்படத் தொடங்கினேன். அறநிலைய ஆட்சித்துறையினரும், என்னுடைய முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீட்டுத் தொகைகளுக்கு உரிய இசைவையும் அநுமதியினையும் வழங்கியுதவினர்.

திருப்பணி வேலைகளைத் தொடங்குவதற்கு முன்னர், இத் தலத்தின் வரலாற்றை ஆராய்ந்து வெளியிட்டால், அன்பர்களுக்கு அது பெரிதும் பயன்படுவதுடன், திருப்பணி வேலைகளுக்கும் மிக்க உதவியாக இருக்கும் என்று பெரியவர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

அதன்படியே, அறநிலையத்துறையின் சார்பில் வெளிவரும் 'திருக்கோயில்' திங்கள் இதழின் ஆசிரியர் திரு. **புலவர் நா. ரா. முருகவேள்**, எம். ஏ. எம். ஓ. எல்., அவர்களை அணுகி, இத்தலவரலாற்றினை எழுதியுதவுமாறு வேண்டிக் கொண்டேன். அவரும் அதற்கு இசைந்து, தமது

பல வேலைகளுக்கு இடையே, மிகவும் குறுகிய காலத்திற்குள், தலவரலாற்று நூலினை ஆராய்ந்து எழுதியுதவினர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. N. **கிருஷ்ணசாமி ரெட்டியார்** அவர்கள் தலைமையில் நிகழும் திருப்பணித் துவக்க விழாவில், திரு. M. AR. S. AR. **சுவாமிநாதன் செட்டியார்** அவர்கள் தலைமையில் வழக்கறிஞர் திரு. என். **பழநியப்பன்** பி. ஏ. பி. எல்., அவர்களால் இத்தல வரலாற்று நூல், இன்று வெளியிடப் பெறுகின்றது, இதனை எழுதியுதவிய **புலவர் திரு, ந. ரா. முருகவேள்** அவர்கட்கும் அழகாக அச்சிட்டுக் கொடுத்த ஞானு அச்சகத்தினருக்கும், இதனை வெளியிட்டருளும் வழக்கறிஞர் திரு. என். **பழநியப்பன்**, பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் என் அன்பையும், நன்றியையும் பெரிதும் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இராஜகோபுரம் மற்றும் விமானங்களின் திருப்பணிகளுக்குச் சுமார் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் தேவைப்படுகின்றது. இச் சிறந்த திருப்பணி வேலைகளுக்கு, அன்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற பொருளதவிகள் செய்து, அருள்மிகு வேங்கீசுவரப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

கோடம்பாக்கம்
12—6—75

K. M. **கௌரிசங்கர முதலியார்**
பரம்பரை அறங்காவலர்


# அருள்மிகு
# வேங்கீசுவரர் திருக்கோயில் தலவரலாறு

**முன்னுரை :**

சென்னையில் இந்நாளில் சிறப்புடன் விளங்கி வரும் பகுதிகளில் கோடம்பாக்கம் என்பது ஒன்று என்பது யாவரும் அறிந்தது. கோடம்பாக்கம் என்னும் ஊர்ப்பெயரின் காரணம் பற்றித் தலபுராண முறையில், பலவகை விளக்கங்கள் கூறப்படுகின்றன. சிவபெருமான், திரிபுர அசுரர்களை அழிப்பதற்காக, மேரு மலையை வில்லாக ஆக்கி வளைத்த இடம் கோடம்பாக்கம் (கோடு+அம்பு+ஆக்கம் = கோடம்பாக்கம்; கோடு—மலை) என்று ஒருசிலர் கூறுவர். மற்றும் சிலர் ஆதிசேடனின் வழியில் வந்த கார்க்கோடகன் என்னும் நாக அரசன், திருமாலை வழிபட்ட இடம் கோடம்பாக்கம் (கோடகன்+பாக்கம்=கோடம்பாக்கம்) எனக் கூறுவர். இச்செய்திக்கு அடையாளமாக ஆதிமூலப்பெருமாள் என்னும் பெயரில், இங்கே திருமால் கோயில் கொண்டு எழுந்தருளியிருத்தலை, இவர்கள் தம் கருத்துக்குச் சான்றாகக்காட்டுவர்.

இத்தகைய விளக்கங்கள் எங்ஙனம் இருப்பினும், இந்நாளில் கோடம்பாக்கம் என வழங்கி வருவது, பண்டைக்காலத்தில் கோடலம்பாக்கம் எனப் பெயர் பெற்றிருந்ததாகத் தெரிகின்றது.

இலக்கியங்களில் இது 'கோடலம் பாகை' எனவும், 'கோடல்' எனவும் குறிப்பிடப் பெற்றுள்ளது. 'பாகை' என்பது 'பாக்கம்' என்பதன் மரூஉ. கோடலம் பாக்கம் என்பதே இந்நாளில் கோடம்பாக்கம் என மருவி வழங்கி வருகின்றது. இவ்வுண்மை பின்வரும் செய்திகளாலும், சான்றுகளாலும் உணரப்படுகின்றது.



புதிதாக கட்டப்பட இருக்கும் நூதன ராஜ கோபுரத்தின் தோற்றம். இதற்கான மதிப்புத் துகை சுமார் ரூ. 1,55,000

## ஞானமிர்தம் :

'ஞானமிர்தம்' என்பது, ஒரு சிறந்த சைவ சித்தாந்த சாத்திர ஞானப் பெருநூல். இது சித்தாந்த சாத்திரங்கள் பதினுன்கிலும் பழைமை வாய்ந்தது. சங்க இலக்கியங் களைப் போன்ற தமிழ் நடைநலம் சான்றது. சிவஞான போதத்திற்கு உரை இயற்றிய பாண்டிப்பெருமாள், சிவஞான சுவாமிகள் என்பவர்களால் மேற்கோள் நூல் என மதித்துப் போற்றப் பெற்ற மாட்சிமையுடையது. சிவஞான சித்தியார்க்கு உள்ள அறுவர் உரையிலும், சிவப்பிரகாசத் துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் வகுத்த நல்லுரையிலும், ஞானமிர்தப் பகுதிகள் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன. சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, முத்தி முடிவு என்னும் பழைய நூல்களிலும், இதன் பாடல்கள் பல தொகுக்கப் பட்டுள்ளன.

## வாகீச முனிவர் :

இத்தகைய சிறந்த ஞானப் பெருநூலை இயற்றியவர் வாகீச முனிவர் என்னும் மாபெருஞ் சான்ருேர் ஆவர். இவர் சென்னைக்கு அணித்ததாக உள்ள திருவொற்றியூரில் சில காலம் வாழ்ந்து வந்தார். இரண்டாம் இராசாதி ராசன் (கி.பி. 1163-1186) காலத்தில், அவனது ஓன்பதாம் ஆட்சி யாண்டில், திருவொற்றியூரில் பங்குனி உத்திரப் பெருவிழா நடைபெற்றது. அதற்கு இரண்டாம் இராசாதி ராச சோழனும் வந்திருந்தான். ஆரும் திருநாள் அன்று திருவொற்றியூர் இறைவனை படம்பக்க நாயக தேவர், அக்கோயிலில் உள்ள மகிழ மரத்தின் கீழ்த் திருவோலக்கம் (மகிழடி சேவை) செய்தருளினர். அதுபோது அங்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு ஆகிய "ஆளுடை நம்பி ஸ்ரீ புராணம்" விரிவுரை செய்யப்பெற்றது. அதனை

இராசாதிராச சோழனுடன் இருந்து கேட்டவர்களுள் வாகீச முனிவரும் ஒருவர் என்று, கல்வெட்டு (S. I. I. Vol. VI. No. 1354) ஒன்று விளக்குகிறது. இவ்வண்ணம், அரசரும் மதித்துப் போற்றும் மாட்சிமை பெற்றிருந்தவரும், கோளகி மடம் என்பதன் தலைவராக விளங்கியவரும், ஞானாமிர்த நூலின் ஆசிரியரும் ஆகிய வாகீச முனிவர் கோடம்பாக்கத்திலும் வாழ்ந்து வந்தார் எனத் தெரிகின்றது.

வாகீச முனிவர் கி. பி. 1145 முதல் கி. பி. 1205 வரை வாழ்ந்தவராதல் கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, ஒரு கல்வெட்டுச் சான்றின்படி கி. பி. 1232 ஆண்டிற்குச் சிறிது முன் பின்னாக வாழ்ந்திருந்தவர் என அறிஞர்கள் ஆராய்ந்து துணிந்துள்ள ஆசிரியர் மெய்கண்டார், இவர்க்குப் பிற்பட்டவராதல் வேண்டும், சைவ சித்தாந்த சாத்திரங்களின் தனிப் பெருஞ் சான்றோராகிய ஆசிரியர் மெய்கண்ட தேவர்க்கும் முற்பட்ட ஒரு சைவச் சான்றோர், கோடம்பாக்கத்தில் வாழ்ந்திருந்தனர் என்னும் செய்தி, நாம் அறிந்து பெருமிதம் எய்துவதற்கு உரியது ஒன்றேயன்றோ?

## *பரமானந்த முனிவர் :*

இனி, இவ்வாகீச முனிவர் மட்டுமேயன்றி, அவர்தம் ஞானாசிரியர் ஆகிய பரமானந்த முனிவர் என்பவரும் கோடம்பாக்கத்திலேயே தங்கி வாழ்ந்திருந்தனராவர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அவர்தம் இயற் பெயர் அருள்மொழித் தேவர் என வழங்கியது. இப் பரமானந்த முனிவர்பால்தான் வாகீச முனிவர் சைவ சித்தாந்த நூல்களைப் பாடங்கேட்டுப் பயின்றுணர்ந்து, புலமை நலம் கைவரப் பெற்று ஒளிர்ந்தார்.

> “புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
> தோற்றத் தன்ன ஆற்றல் எங் குரிசில் !
> குணப் பொற்குன்றம் : வணக்க வாரா
> ஐம்புல வேழத்து வெந்தொழில் அவியக்



அருள்மிகு சாந்தநாயகி அம்மன். சாந்த சொரூபியாகிய அம்மன் பக்தர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்து அருள்பாலிக்கின்றாள். அம்மனிடம் பிரார்த்தித்து வரங்களைப் பெற்றவர் பலர்.

கருணை வீணை காமுறத் தழீ இச்
சாந்தக் கூர்முள் ஏந்தினன் நிறீஇத்
தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி!
பரமா னந்தத் திருமா முனிவன்!'' எனவும்;

''பாடல் சான்ற பல்புகழ் நிறீஇ
வாடாத் துப்பின் கோடல் ஆதி!
அருள் ஆபரணன்! அறத்தின் வேலி!
பொருண்மொழி யோகம் கிரியையிற் புணர்த்த
அருண்மொழி திருமொழி போலவும்...''

எனவும், ஞானுமிர்தத்துள் (4,28) வாகீச முனிவர் பரமானந்த முனிவரைப் புகழ்ந்து பாராட்டிப் பரவி மகிழ்கின்றார். இச் செய்திகளை,

இருள்நெறி மாற்றித்தன் தாள் நிழல்
இன்பம் எனக்களித்தான்
அருள்மொழித் தேவன்! நற் கோடலம்
பாகை அதிபன்! எங்கோன்!
திருநெறி காவலன்! சைவ
சிகாமணி! சில் சமய
மருள்நெறி மாற்ற வரும்
பரமானந்த மாமுனியே!''

என வாகீச முனிவர் பாடியுள்ள தனிப்பாடலும் இனிது விளக்குகின்றது. இவ்வாற்றால் ஏறத்தாழ 800–900 ஆண்டுகளுக்கும் முன்பே, நம் கோடம்பாக்கம் இலக்கியப் புகழ் பெற்றுச் சிறப்புடன் இலங்கி வந்தமையினை, யாவரும் இனிது தெளியலாம்.

இதனுற் கோடம்பாக்கம் புதியதாக உண்டானதன்றி, மிகவும் பழைமை வாய்ந்ததால் நன்கினிது தெளியப்படும். இந்நாளைய எழும்பூர் (Egmore) முதற் குலோத்துங்க சோழனின் (1070 A. D.) செப்பேடுகளில் குறிக்கப் பெற்றுள்ளது. மேலும் அது கி. பி. ஏழாம் நூற்றுண்டில் மகேந்திரவர்மன் (கி. பி. 600–630), நரசிம்மவர்மன் (கி. பி. 630–668) காலத்தவர் ஆன திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

இடும்பாவனம் எழுமூர் ஏமூர் தோமூர்
எறும்பியூர் ஏராரும் ஏம கூடம்
கடம்பை இளங்கோயில் தன்னினுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே.

– க்ஷேத்திரக்கோவை 5.

எனவரும் பாடலிலும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. இவ்வாறே, நுங்கம்பாக்கம் என்பது, முதலாம் இராசேந்திர சோழனின் (கி. பி. 1012) செப்பேடுகளில் கூறப் பட்டுள்ளது. புதுப்பாக்கம், வேப்பேரி, செம்பியம், வியாசர்பாடி என்பவை விசயநகர அரசர்களின் சாசனங் களில் இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம். திருவொற்றியூர், திருமயிலை, திருவல்லிக்கேணி, திருவான்மியூர் என்னும் தலங்களின் பழைமை அனைவரும் அறிந்ததொன்று.

## தொண்டை நாடு :

பண்டைக் காலத்தில் தமிழகத்தின் வடபகுதி 'தொண்டை நாடு' என வழங்கப்பெற்றுவந்தது. 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்பது அவ்வைப் பிராட்டியார் திருவாக்கு. இத்தொண்டை நாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது.

1. புழற்கோட்டம் 2. புலியூர்க் கோட்டம் 3. ஈக்காட் டுக் கோட்டம் 4. மணவிற் கோட்டம் 5. செங்காட்டூர்க் கோட்டம் 6. பையூர்க் கோட்டம் 7. எயிற் கோட்டம் 8. தாமல் கோட்டம் 9. ஊற்றுக்காட்டுக் கோட்டம் 10. களத்தூர்க் கோட்டம் 11. செம்பூர்க் கோட்டம் 12. ஆம்பூர்க் கோட்டம் 13. வெண்குன்றக் கோட்டம் 14. பல்குன்றக் கோட்டம் 15. இளங்காட்டுக் கோட்டம் 16. காலியூர்க்கோட்டம் 17. செங்கரைக் கோட்டம் 18. படுவூர்க் கோட்டம் 19. கடிகூர்க் கோட்டம் 20. செந்திருக்கைக் கோட்டம் 21. குன்ற வர்த்தனக் கோட்டம் 22. வேங்கடக் கோட்டம் 23. வேலூர்க் கோட்டம் 24. சேந்தூர்க் கோட்டம்.

## புலியூர்க் கோட்டம்

இவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பது மிகவும் புகழ் பெற்ற தொன்றாக விளங்கியது. பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் சுவாமிகள் அவதரித்த குன்றத்தூர் வளநாடு, புலியூர்க் கோட்டத்தின் ஓர் உட்பிரிவேயாகும்.

''தொண்டை நாடு, பாலாறு பாய்ந்து வளம் சுரந்து நல்கும் மாட்சிமையுடையது. அதன்கண், எங்கணும் சோலைகள் சூழ்ந்து காணப்படும். அச் சோலைகளில் பாளைகள் விரிந்து மணம் கமழும். அப்பூஞ்சோலைக்குள் வண்டுகள் இசை பாடும். மயில்கள் களித்து நடனஞ் செய்யும். இத்தகைய சிறப்பு மிக்க தொண்டை நாட்டில் 24 கோட்டங்கள் உண்டு. அவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பது ஒன்று. அதன்கண் ஒரு பகுதியாகத் திகழ்வது குன்றை வளநாடு. அவ்வளநாட்டின் தலைநகரம் குன்றத்தூர். அக்குன்றத்தூரிலேயே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் என்னும் அருண்மொழித் தேவர் அவதரித்த சேக்கிழார் திருமரபு சிறந்து விளங்கியது''.

தொண்டை நாடு - புலியூர்க் கோட்டம் – குன்றத்தூர் வளநாடு ஆகியவற்றின் சிறப்பினை,

> ''பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
> பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
> காலாறு கோலிஇசை பாட நீடுங்
> களிமயில்நின் றாடும் இயல் தொண்டை நாட்டுள்
> நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்
> நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க
> சேலாறுகின்ற வயற் குன்றத்தூரில்
> சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே''

எனத் 'திருத்தொண்டர் புராண வரலாற்றில்' உமாபதி சிவம் புகழ்ந்துரைத்தல் காணலாம். குன்றத்தூர், போரூர்,

மாங்காடு, அமரூர், கோட்டூர் ஆகிய வளநாடுகளைத் தன்னகத்தே கொண்ட புலியூர்க் கோட்டத்தின் தலைமையிடம் ஆகிய புலியூர் என்பது, இந்நாளைய கோடம்பாக்கமே யாகும்.

## புலியூர் :

இந்நாளில் கோடம்பாக்கத்தின் ஒரு பகுதியாத் திகழும் புலியூர் என்பது, பண்டைக்காலத்தில் கோடலம்பாக்கத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த ஒரு பெரும்ஊராகும். இதற்குப் புலியூர் என்னும் பெயர் அமைந்ததற்கு உரிய காரணம் பின்வருமாறு :

முன்னொரு காலத்தில் மத்தியந்தினர் என்னும் ஒரு பெரு முனிவர் இருந்தார். அவருக்கு ஒரு தவப்புதல்வர் தோன்றினர். அப்புதல்வரின் பெயர், மழ முனிவர் (இளங் குழந்தையாகிய முனிவர்) என்பது. அவர் தம் தந்தையாரிடத்தில் நான்கு வேதம், ஆறு அங்கம், மீமாம்சை, புராணம், தருக்கம், தரும சாத்திரம் முதலிய பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். கல்வியின் பயன் கடவுளை வழிபடுதலும், இறைவன் அருளைப் பெறுதலும் என உணர்ந்தார். அதனுல் மண்ணுலகில் உள்ள புண்ணியத் தலங்களையெல்லாம் தரிசித்து வணங்கவும், இறைவனைப் பூசித்து வழிபடவும் விழைந்தார். பூக்களைப் பொழுது விடிந்தபின் எடுத்தால் வண்டுகள் தீண்டும். இரவில் எடுக்கச் சென்ருல் வழி தெரியாது. கோங்கு முதலான மரங்களில் மலர் பறிக்கலாமெனில், அவற்றின் அடிமரம் உயர்ந்து வளர்ந்திருத்தலின் கையும் காலும் பனியால் வழுக்கும். ஆதலின், யாது செய்யலாம் என்று பலவாறு எண்ணினுர். முடிவில் இறைவனைத் துதித்துப் போற்றி ‘‘அடியேன் நுமக்கு ஏற்ற இனிய எழில் மலர்களைப் பறித்துப் பூசை செய்வதற்குப் பயன்படும் வகையில் அடியேனுடைய கையும் காலும் புலியைப் போல வலிமையான நகங்களைப் பெறவும், அவைகளில் காணும் திறன்மிக்க சிறந்த கண்கள் அமையப் பெறவும் திருவருள் சுரந்தருள்க’’ எனப் பணிந்து வேண்டினுர். இறைவனும்



இந்த உருவங்கள் ஈசுவர விமானத்தைப் பெற்று எடுக்கப்பட்டன. புலிக்கால் முனிவர், புலிக்கால் பெற்று அம்மையப்பனைத் தரிசிக்கிறார். புலிக்கால் முனிவரால் பூசிக்கப்பட்டதால் ஈசுவரனுக்கு வேங்கீசுவரர் எனப் பெயர் பெற்றதாக வரலாறு.

அதற்கு இசைந்து அவ்வாறே அளித்து அருளினன். இங்ஙனம் மலர் பறித்துச் சாத்தி இறைவனை வழிபடுதற் பொருட்டுத் தம் கைகால்களில் புலியைப் போன்ற வலிமை மிக்க நகங்களைப் பெற்றதனால் இவருக்குப் புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர், வியாக்கிரம்-புலி; பாதம்-கால்) என்னும் காரணப் பெயர் ஏற்படுவதாயிற்று.

## புலிக்கால் முனிவர் : (வியாக்கிரபாதர்)

இவ்வாறு புலிக்கால் முனிவர் என்னும் பெயர் பெற்ற (வியாக்கிரபாத) முனிவர், பல புண்ணியத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்து, தாம் தில்லை என்னும் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானை வழிபட்டு அருள் பெறுதற்கு முன்னர், இங்கு நெடுநாள் தங்கித் தம் பெயரால் ஒரு சிவலிங்கத் திருமேனியை நிறுவி, வழிபட்டு வாழ்ந்து வந்தார். புலிக்கால் முனிவர் தங்கி வழிபடப் பெற்ற ஊராதலின் இதற்குப் புலியூர் என்றும், இங்குள்ள சிவபெருமானுக்குப் புலியூருடையார் என்றும் பெயர்கள் வழங்குவனவாயின. புலியூர் என்பது, வியாக்கிரபுரி எனவும் வழங்கும். ஆதலின் இங்குள்ள இறைவரின் பெயர் வியாக்கிரபுரீசுவரர் எனவும் வழங்கப்படும். புலிக்கு வேங்கை எனவும் ஒரு பெயர் உண்டாதலின், புலியூர்க்கு வேங்கைபுரம் எனவும், அங்குள்ள இறைவனுக்கு வேங்கீசுவரர் எனவும் பெயர்கள் அமைந்தன. எனவே புலியூருடையார்-வியாக்கிரபுரீசுவரர்-வேங்கீசுவரர் என்னும் பெயர்கள் அனைத்தும், இங்குள்ள சிவபெருமானுக்குரிய திருப்பெயர்களாகும்.

புலிக்கால் முனிவர், இப் புலியூரில் நெடுங்காலம் தங்கிச் சிவபெருமானை வழிபட்டதன் பயனாகவே, பின்னர்த் தில்லைச் சிதம்பரம் (பெரும்பற்றப்புலியூர்) சென்று, அங்கேயும் தம் பெயரால் திருப்புலீச்சுரம் என்னும் திருக்கோயிலை அமைத்து வழிபட்டுத் தவம் புரிந்து, தில்லை நடராசப் பெருமானின் திருநடம் கண்டு மகிழும் பேறு பெற்றார். திருப்பாதிரிப் புலியூர், திருப்பெரும்புலியூர் முதலிய தலங்களிலும், வியாக்கிரபாதர் இறைவனை வழிபட்டு மகிழ்ந்தார் என்பது வரலாறு.

**பதஞ்சலி முனிவர்;**

ஒருசமயம் திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தார். அவர் தமது அறிதுயில் (யோகநித்திரை) நீங்கி, அரகர சிவசிவ என்னும் திருப்பெயர்களைச் சொல்லி, கைகளைத் தலைமேல் குவித்து வணங்கிக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகப் பத்மாசனம் என்னும் நிலையில் எழுந்தருளியிருந்தார். அங்ஙனம் அவர் மன மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்கும் நிலைக்குக் காரணம் யாது? எனத் திருமகளும் ஆதிசேடனும் பிரமதேவனும் பணிந்து அன்புடன் வினவினர்.

அதற்குத் திருமால், முன்பொருகால் சிவபெருமான் தாருக வன முனிவர்களின் செருக்கை அடக்கித் திருத்துவதற்காகப் பிச்சைத் தேவர் (பிட்சாடனர்) வடிவங் கொண்டு சென்றதனையும், தாருக வன முனிவர்கள் தம் செருக்கடங்கிப் பணிந்தபோது சிவபெருமான் பயங்கர நிருத்தம், சுத்த நிருத்தம், அநுக்கிரக நிருத்தம், சௌக்கிய நிருத்தம், ஆனந்த நிருத்தம் முதலிய திருநடனங்களைச் செய்தருளியதனையும் கூறி, அவைகள் எல்லாம் இப்போது எம் நினைவில் எழுந்தன. இதனாலேயே யாம் இப்போது அறிதுயிலில் நின்று எழுந்து மகிழ்ந்திருந்தோம் என்று விவரித்து உரைத்தார்.

அந்நிலையில், சிவபிரானின் திருநடனங்களின் திறத்தைப்பற்றித் திருமால் விவரித்து உரைக்கக் கேட்டு வியந்து மகிழ்ந்த ஆதிசேடன், பக்தியுணர்வால் பரவசப்பட்டு நின்றான். ஆதிசேடனின் பக்தியுணர்வைக் கண்டு மகிழ்ந்த திருமால் ''இத்தகைய சிறந்த பக்தனாகிய நீ சிவபிரானின் திருநடனத்தைக் கண்டுகளிக்க விரும்பினையாயின், அவரை நோக்கித் தவம் செய்து அருள் பெறுக'' என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். அதன்படி ஆதிசேடன், புத்திரப்பேறு விரும்பித் தவங்கிடந்த அத்திரி முனிவரின் மனைவி ஆகிய அநசூயை என்பவளின் கைகளில், ஐந்து தலைகள் கொண்ட ஒரு சிறு பாம்பாக வந்து பொருந்தினான். அவள் தன் கைகளில் ஒரு சிறு பாம்பு வந்து கிடத்தல்

கண்டு அஞ்சிக் கைகளை உதறினள். அப்போது அச் சிறு பாம்பாகிய ஆதிசேடன் அவளது கால்களின்மேல் விழுந் தான். இங்ஙனம் பாதத்தில் விழுந்ததனல், ஆதிசேடன் பதஞ்சலி (பதம்-கால்; சலித்தல்-விழுதல்) எனப் பெயர் பெற்று, அத்திரி முனிவருக்கும் அநசூயா தேவியார்க்கும் மைந்தராக வளர்ந்து வந்தார். இப்பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாதரைப் போலவே தில்லைக் கூத்தப் பெருமா னின் திருநடனம் காணப் பெருந்தவங்கள் புரிந்து வந்தார்.

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்"

என்றபடி தில்லைக் கூத்தப் பெருமானின் திருநடனம் காண விரும்பிய உணர்ச்சி ஒற்றுமையின் காரணமாக, வியாக்கிர பாதரும் பதஞ்சலி முனிவரும் இணையற்ற இனிய நண்பர் களாகும் பெருங்கிழமை உரிமை பூண்டனர். இவ்விருவரும் பல தலங்களை ஒருங்குசேர்ந்து வழிபட்டுப் பணிந்து இன்புற்ற னர். அம்முறையில் கோடலம்பாக்கம் புலியூரில் எழுந்தருளி யுள்ள வேங்கீசுவரனையும் பன்னெடுங்காலம் வழிபட்டுப் பணிசெய்து போற்றினர். இறுதியாக இவர்கள் இருவரும் தில்லைக்குச் சென்று முறையே திருப்புலீச்சுரம் திருஅனந் தேச்சரம் என்னும் திருக்கோயில்களை அமைத்து வழிபட்டுத் தில்லைக் கூத்தப் பெருமானின் திருநடனம் கண்டு மகிழ்ந்து இன்புற்றார்கள் என்பது வரலாறு.

கோடம்பாக்கம் புலியூர் வேங்கீசுவரர் திருக்கோயிலில், இவ்வரலாற்றுக்குச் சான்றாக, இன்று வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர் ஆகிய இரு முனிவர்களின் சிலைகளும் எழுந்தருளச் செய்யப் பெற்றிருத்தல் காணலாம். இவை களால் இந்தத் தல வரலாற்றுக் குறிப்புக்கள் புலனாகின்றன.

## அறங்காவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| திரு | வைத்தியநாத முதலியார் | சுமார் 185 வருஷங்களுக்கு முன்பு |
| ,, | வேங்கிலிங்க முதலியார் | 105 |
| ,, | இராமலிங்க முதலியார் | 75 ,, |
| ,, | மாரியப்ப முதலியார் | 1943 வரை |
| ,, | கிருஷ்ணசாமி முதலியார் | 31-3-55 வரை |
| ,, | M. V. மாணிக்க முதலியார் | 29-10-59 வரை |
| ,, | K. M. கௌரி சங்கர முதலியார் | 29-10-59 முதல் |

## வாகனங்களின் பட்டியல்

| | |
|---|---|
| பெரிய ரிஷபம் | கோ. தாண்டவ மூர்த்தி கிராமணியாரால் செய்து வைக்கபபட்டது |
| சின்ன ரிஷபம் | கிராமப் பொதுச் சொத்திலிருந்து செய்து வைக்கப்பட்டது. |
| மயில் வாகனம் | தேவத்தான நிதியிலிருந்து செய்யப் பட்டது. |
| மூஷிக வாகனம்<br>பிரதோஷ ரிஷப வாகனம் | பரம்பரைத் தர்மகர்த்தா கோ. கிருஷ்ணசாமி முதலியாரால் செய்து வைக்கப் பட்டது. |

## சிவன் கோவில் உற்சவாதிகள்

1. சித்திரா பௌர்ணமி உற்சவம்
2. பிள்ளையார் சதுர்த்தி உற்சவம்
3. விசயதசமி பார்வேட்டை உற்சவம்
4. திருவாதிரை நடராசர் உற்சவம்
5. பங்குனி உத்திரத் திருக் கல்யாண உற்சவம் பஞ்ச மூர்த்திகள் வாகனங்களில் திருவீதி புறப்படுதல்.

## கட்டளைகள்


1. நவராத்திரியில் "சரசுவதி பூசை" கட்டளை பரம்பரைத் தர்மகர்த்தா கிருஷ்ணசாமி முதலியாரால் 60 சென்டு நிலம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.
2. "மகா சிவராத்திரி" இரவு 4 கால அபிஷேகக் கட்டளை எல்லம்மாள் என்பவரால் புலியூரில் 23 சென்டு நிலமும் கோடம்பாக்கத்தில் மூன்று சென்டு நிலமும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

## அருள்மிகு அழகப்பெருமாள் தேவத்தான உற்சவாதிகள்

1. ஜெயந்தி உற்சவம்
2. புரட்டாசி சனிக்கிழமை உற்சவம்
3. வைகுண்ட ஏகாதசி உற்சவம்
4. சங்கராந்தி உற்சவம்
5. இராம நவமி உற்சவம்

## ஸ்ரீ நாகாத்தம்மன் தேவத்தான உற்சவம்

ஆடி மாத கடைசி ஞாயிற்றுக் கிழமை உற்சவம்



அருள்மிகு வேங்கீசுவரர் விமானம் கிலமாக உள்ளது, தற்சமயம் திருப்பணி செய்யப்பட இருக்கிறது. இந்த விமானம் தூங்காணை மாட வடிவத்தில் உள்ளது. ஆகையால் சோழ அரசர்கள் காலத்தில் கட்டப் பட்டிருத்தலை உணர்த்தப்படுகிறது, விமானம் கோவிலின் புராதனத் தன்மையைக் குறிக்கின்றது.